# <u>தேவகோட்டை நகராட்சி</u>

தேவகோட்டை நகராட்சி வளாகத்தில் அவசரக்கூட்டம் தனி அலுவலரால் 10.09.2019ம்தேதி செவ்வாய்கிழமை காலை 11.00 மணிக்கு கூட்டம் நடைபெறவுள்ளது. அவ்வமயம் கீழகண்ட பொருட்கள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

ஆணையாளர்/தனி அலுவலர் (பொ),
தேவகோட்டை நகராட்சி

## <u>பொருள்–700</u>

தேவகோட்டை நகராட்சி சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ள முதல்நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் பரப்பளவு 12.42 சதுர கி.மீ. ஆகும். 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை 51865 ஆகும். இந்நகரில் தற்போதுள்ள மக்கள் தொகை மற்றும் இனிவரும் காலத்திற்கு பெருகும் மக்கள் தொகைக்கு ஏற்ப கூடுதல் குடிநீர் ஆதாரம் தேவைப்படுகிறது. இதன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு கூடுதலாக 120 லிட்டர் குடிநீர் தினசரி வழங்க வேண்டிய நிலை உள்ளது.

ஏனவே தேவகோட்டை நகராட்சிக்கு வருங்காலங்களில் ஏற்படக்கூடிய குடிநீர் தேவைக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ள நாட்டரசன்கோட்டை உள்ளிட்ட 8 பேரூராட்சிகள் மற்றும் 2452 கிராம குடியிருப்புகளுக்கான காவேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தில் தேவகோட்டை நகராட்சியை சேர்த்துக் கொள்ள சம்மதம் தெரிவித்திடவும், அதற்கான விகிதாசார திட்ட மதிப்பீட்டு தொகையினை வழங்கிடவும் மற்றும் திட்ட ஆய்வுக் கட்டணம் ரூ.5.00 இலட்சத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்திடவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு–**

அ) அனுமதிக்கலாம்.

ஆ) ஆய்வுக் கட்டணம் ரூ.5.00 இலட்சத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து செலுத்திட அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.700, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள்– 701

தேவகோட்டை நகராட்சியில் சேதமடைந்துள்ள சாலைகள் மேம்பாடு செய்திட தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் 2019–2020ன் கீழ் கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.17349/2019/இ3, நாள்.03.0.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ரூ. கோடியில்)

| நகராட்சியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்ய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி/நில அபிவிருத்திக் கட்டணம் | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|
| தேவகோட்டை | 5.00 | 1.70 | 2.30 | 1.00 |

மேற்கண்ட நிதி ஒதுக்கீட்டின்படி, TURIF – 2019–2020ன் கீழ் ரூ.5.00 கோடி மதிப்பீட்டில் 10.270 கி.மீ நீளமுள்ள கீழ் கண்டுள்ள சாலைகளை மேம்பாடு செய்து தார்த்தளம் அமைத்திட அனுமதி வேண்டப்படுகிறது.

| Sl. No. | Name of Streets | Lenth (in Metre) | Breadth (In Metre) | Amount (In Laks |
|---|---|---|---|---|
| 1. | Providing B.T. Surface using CMP paver machine @ Ramnagar 2nd St, Corss road, Ramnagar 6th st(Grematiorium Approach road)and cross road, Somasundaram Nagar, Thillai Nagar Area, Pudur South( Avarangkadu road) Nehru st, M.M.AL.St, T.M St,and Kasilinga nagar road, (Saraswathi wasaha salai cross) (war-1,2,4,5,6& 11) in Devakottai Municipality. | 4010 | 4.50 & 4.10 | 200.00 |
| 2. | Providing B.T. Surface using CMP paver machine @ M.M.Nagar road (Ramalinga nagar)Thiruppatur road cross (Kaderi ambal nagar)Bharathi nagar, Anna salai road & cross raod, V.Oorani north and West st, Periyakaruppam st and Krishnarajapuram west(Ward-2,3,16,22,23 &24) in Devakottai Municipality. | 4020 | 4.10 & 6.00 | 200.00 |
| 3. | Providing paver Blcok pavement to Jeyamkonda , Vinayagapuram cross, Thanicha oorani cross road, Thiruppatur road cross (Opp CSI School) Vivekantha puram north cross, Kallupattiyar street Cross Seeni police Lane, Sammanthar st North, Saraswathi vasaga salai cross, Kalaivanar st, A.T.Street, Kalyana sundaram Nagar cross, Nithyakalyanipuram road cross , Thenammai oorani North and cross (Pethan kollai) and Dr.ponnaiah Street (Ward-2,3,7,8,9,11,15,20,23,25 & 26) | 2240 | 4.00, 3.75 & 3.50 | 100.00 |

அலுவலகக்குறிப்பு – அனுமதிக்கலாம். நகராட்சி பங்களிப்பு ரூ.100.00 இலட்சத்தை பொதுநிதியின் கீழ் செலுத்திட அனுமதிக்கலாம்.

<u>நகர்மன்ற தீர்மான எண்.701, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>

## பொருள்–702

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்காக எழுது பொருட்கள், படிவங்கள், கணினி டோனர்கள் மற்றும் பணமதிப்பு படிவங்கள் தமிழ்நாடு மல்டிபர்ப்ஸ் இன்கோ சர்வீஸ், நிறுவனம் திருச்சி மூலம் 2018–2019 மற்றும் 2019–2020ம் நடப்பு நிதி ஆண்டுகளில் கொள்முதல் செய்யப்பட்டதற்கான பட்டியல் கீழ்கண்டுள்ளவாறு வரப்பட்டு உள்ளது.

| பட்டியல் எண் மற்றும் தேதி | | |
|---|---|---|
| 1. | 00944 - 30.05.2018 | Rs.1,84,558 |
| 2. | 00945 - 25.06.2018 | Rs.1,48,680 |
| 3. | 00947 - 27.06.2018 | Rs.90,340 |
| 1. | 02544 - 10.10.2018 | Rs.2,74,308 |
| 2. | 02545 - 10.10.2018 | Rs.31,860 |
| 3 | 02546 - 19.12.2018 | Rs.57,507 |
| 4. | 02547 - 01.02.2019 | Rs.1,63,825 |
| 5. | 02548 - 01.02.2019 | Rs.31,860 |
| **மொத்தம்** | | **9,82,938** |

எனவே மேற்காணும் பட்டியல் தொகை ரூ.9,82,938/– இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.702, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள்–703

| | |
|---|---|
| **பார்வை** | 1)தேவகோட்டை நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1009/2007/எச்1,நாள்.09.12.2015.<br>2)நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் பிரேரணை அனுப்பியது,நாள்.19.12.2018.<br>3)தேவகோட்டை நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.1009/2007/எச்1, நாள்.17.12.2018. |

********

தேவகோட்டை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவின் கீழ் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சியில் உள்ள 27 வார்டுகளில் 13 வார்டுகள் துப்புரவு பணி மேற்கொள்ள பார்வை 1ல் காணும் உத்தரவின்படி அனுமதி வழங்கப்பட்டு இருந்தது. மேற்படி பணிகாலம் 09.12.2018ம் தேதியுடன் முடிவுற்றபடியால் இந்நகராட்சி துப்புரவு பணி தனியார்மயம் ஒப்பந்தப்புள்ளி கோர பார்வை 2ல் காணும் கடிதம் மூலம் நகராட்சி

நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி கோரப்பட்டு விண்ணப்பம் நிலுவையில் உள்ளது. மேற்காணும் நிர்வாக அனுமதி இதுநாள்வரை கிடைக்கப்பெறாததால், ஒப்பந்தப்புள்ளி கோரப்படாததாலும் பார்வை 3ல் காணும் இந்நகர்மன்றத் தீர்மானத்தின்படி 3 மாதங்களுக்கு ஏற்கனவே துப்புரவு பணி மேற்கொண்டு வரும் நிறுவனத்திற்கு ஏற்கனவே பணி உத்தரவில் உள்ள நிபந்தனைகளின் படியும் ஒப்பந்த அறிக்கையின்படியும், மூன்று மாதங்களுக்கு ஒப்பந்த பணி நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம் மேற்கண்ட பணி நீட்டிப்பு 31.08.2019 உடன் முடிவுபெறும் நிலையில் உள்ளதாலும் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் நிர்வாக அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர காலதாமதாகும் என்பதால், இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பணிகள் பாதிப்பு அடையாவண்ணம் மேலும் மூன்று மாதங்களுக்கு 01.09.2019 முதல் 31.12.2019 வரை அல்லது புதிதாக ஒப்பந்த பணி கோரப்பட்டு பணி ஒப்படைக்கும் நாள்வரை இந்நகராட்சியில் தற்போது துப்புரவு பணிகளை மேறகொள்ளப்பட்டு வரும் தனியார் நிறுவனமான மீனாட்சி சாலிட் வேஸ்ட் மேனேஸ்மெண்ட் நிறுவனத்திற்கு இந்நகராட்சியின் மூலம் ஏற்கனவே வழங்கப்பட்ட நிபந்தனைகளின்படியும், ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படியும், பணி நீட்டிப்பு செய்து துப்புரவு பணிகளை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு–</u>

தற்போது மழைக்காலம் தொடங்கவுள்ளதால் டெங்கு, மலேரியா, மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசரம் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி மேற்படி துப்புரவு பணியினை காலநீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர்மன்ற தீர்மான எண்.703, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்–704</u>

இணை இயக்குநர் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 24.06.2019ந் தேதிய வாட்ஸ் ஆப் செய்தியின்படியும் இந்நகராட்சி ஆணையர்அவர்களின் உத்தரவின்படியும் தேவகோட்டை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைப்பை ஆய்வு செய்ய வேண்டிய அலுவலக பணியாளர்கள் மூலம் குழுக்கள் அமைத்து ஆய்வு செய்ய வேண்டி 24.06.2019 அன்றே ஆணையர் அவர்களால் செயலாணை உத்தவு பிறப்பிக்கப்பட்டு ஆய்வுப் பணிகள் நடைபெற்று வந்தநிலையில் 06.08.219ந் தேதிய நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,மதுரை அவர்கள் சுற்றறிக்கையின்படி இந்நகராட்சி ஆணையாளர் அவர்களால் மேம்படுத்தப்பட்ட குழுக்கள் அமைத்து மழை நீர் சேகரிப்பு தொட்டி அமைப்பை ஆய்வு செய்ய வேண்டிய 07.08.2019ந் தேதி அன்று ஆணையர் அவர்களால் மீண்டும் மேம்படுத்தப்பட்ட மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைப்பு ஆய்வு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும் 29.08.2019ந் தேதி அன்று மதுரையில் உள்ளாட்சித்துறை அமைச்சர், அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வு கூட்டத்தில் மழைநீர் சேகரிப்பு ஆய்வு பணிகளை துரிதப்படுத்த வேண்டி நேரடி அறிவுரை வழங்கப்பட்டது. தற்போது மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஆய்வு செய்வதற்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு உள்ள வீடுகள், மழைநீர் சேகரிப்பு அமைப்பு பழுதான வீடுகள், மழைநீர் சேகரிப்பு அமைப்பு இல்லாத வீடுகள் என்று ஆய்வு மேற்கொண்டு கணக்கீடு செய்து அந்தந்த வீடுகளில் சரிபார்ப்பு வில்லை ஒட்டி ஆய்வுப்பணி நடத்த வேண்டியுள்ளது. மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து

பொதுமக்களிடம் விழப்புணர்வு ஏற்படுத்த வேண்டி வீடுதோறும் விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிடப்பட்ட நோட்டீஸ் வழங்க வேண்டியுள்ளது. மேற்படி சரிபார்ப்பு வில்லை மற்றும் நோட்டீஸ்கள் வாங்கிட உத்தேச செலவீனம் ரூ.50,000/– ஆகும். எனவே மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி விலைப்புள்ளி பெற்று சரிபார்பு வில்லை மற்றும் நோட்டீஸ்கள் வாங்கிட மன்ற அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு</u>–
பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**நகர்மன்ற தீர்மான எண்.704, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**</u>

பொருள்–705

**தேவகோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய விநியோக பகிர்மான குழாய்கள்,பிரதான நீரேற்றும் குழாய்கள் 98.00 கி.மீ. நீளம் உள்ளது. மேலும் பொதுக்குழாய்களும் 169 எண்ணம் உள்ளன. இதில் PVC பைப், AC பைப் மற்றும் இரும்பு பைப் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகின்றது. இக்குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் அடைப்புகள் மற்றும் உடைப்புகள் நிவர்த்தி செய்தல் போன்ற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள ரூ.5.00 லட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்ற அனுமதிக்கலாம்.**

**அலுவலகக்குறிப்பு–**

**குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.**

<u>**நகர்மன்ற தீர்மான எண்.705, அலுவல் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**</u>

(ஒப்பம்) கே.சுதா

ஆணையாளர்/தனி அலுவலர்
தேவகோட்டை நகராட்சி